CC 121/2024

பு.சா. 1

பெயர் : பிரேம்குமார்

24.10.2025

**எதிரி தரப்பில் கூடுதல் நிருபண வாக்குமூலம் தொடர்பான குறுக்கு விசாரணை**

1. எனது தரப்பு சான்றாவணம் Exp7 அடிப்படையில்தான் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்கள் அனைத்தும் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையானது கடனுக்காக கொடுக்கப்பட்டது இல்லையென்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் நான் தற்போது தாக்கல் செய்துள்ள Ex.p.8,9 ஆவணத்தை பற்றிய குறிப்பு இல்லையென்றால் சரிதான், ஆனால் Exp7 ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ள மில்லின் மின்சார தொடர்பான ஆவணங்களை தான் தாக்கல் செய்துள்ளேன். Exp8,9 ஆவணங்களில் உள்ள மின்சார இணைப்பு எண் Exp7 ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் மில்லின் பெயர் குறிப்பிடபட்டுள்ளது.

2. Exp8 ஆவணத்தில் RTI Act ல் கேட்கப்பட்ட கேள்விகளில் எதிரி நிறுவனத்தில் பெயர் குறிப்பிட்டு அதற்கான மின்னிணைப்பு பற்றி கேட்கவில்லை என்றால் எனது ஒப்பந்தமானது விஷ்ணு யான்ஸ் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி விஷ்ணு யான்ஸ் நிறுவனமானது விஜயலட்சுமி ஸ்பின்னிங் மில் நிறுவனத்தை லீஸ்க்கு எடுத்துள்ளார்கள் அதனை பற்றி Exp7 ஆவணத்தில் குறிப்பு உள்ளது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் Exp7 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட ஒருவாரத்திற்குள் தெரியவந்தது. மேற்படி மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் 12.03.2025 ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளேன் என்றால் தேதி சரியாக எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் முதலில் எனது குறுக்கு விசாரணை முழுமையாக முடிந்தபிறகுதான் நான் RTI Act ன் கீழ் தற்போது தாக்கல் செய்துள்ள Exp8,9 ஆவணத்தை கேட்டேன் என்றால் சரிதான்.

3. Crl.M.P. 315/2025 மனுவில் நான் கூறியுள்ள காரணங்கள் தவறு என்றாலும், மேற்படி மனுவில் நான் கூறியுள்ளதுபோல் எதிரி அவரது 351(1)(b) BNSS கேள்வியின்போது எந்த பதிலும் கூறவில்லை என்றால்

மனுவில் பிழையாக குறிப்பிடபட்டுள்ளது. தற்போது நான் தாக்கல் செய்துள்ள Exp8,9 ஆவணங்களானது வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. Exp7 ஆவணத்தில் காசோலையை பூர்த்தி செய்து வசூலுக்கு செலுத்தலாம் என்று எந்த சரத்துகளும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. ஆதரவாக கொடுக்கப்பட்ட ஆவணத்தை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்படியாக எதிரி எனக்கு எந்த தொகையும் கொடுக்கவேண்டிய கடமை இல்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**